செய்தி வெளியீடு எண்:864 நாள்:11.10.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு அமைச்சர் சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அவர்களால், முதன்மைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களுடன், இத்துறையின் துறைத் தலைவர்களான சமூக நல இயக்குநர், சமூக பாதுகாப்பு இயக்குநர் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் இயக்குநர் ஆகியோருடன் இன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது.

2. இக்கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மற்றும் இத்துறையின் பல்வேறு நலத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி அவற்றின் பலன்கள் பொதுமக்களுக்கு விரைவாக சென்று சேருவதன் அவசியம் குறித்து மாண்புமிகு அமைச்சர், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன.

**ஷம்பு கல்லோலிகர்**
முதன்மைச் செயலாளர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9